அரசுகள் மாறலாம்; குழுக்கள் கலைக்கப்படலாம்; ஆனால் வரலாற்றுப் பங்களிப்புகள் நிலைத்திருக்கும்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடிதம்.... 4 ஆம் பக்கத் தொடர்ச்சி

உயர்நிலைக் குழுவின் அறிக்கையின் இரண்டாம் பகுதி 2027 மே மாதத்தில் நிறை வடையத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில், அதற்கு ஆறு மாதங்களே எஞ்சியிருந்தபோது தற்போதைய தமிழ்நாடு அரசு குழுவைக் கலைத்திருப்பது மிகுந்த ஏமாற்றமளிப்பதாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முதல் பகுதி தேசிய அளவில் ஆக்கப்பூர்வ மான விவாதங்களை உருவாக்கியிருந்த நிலையில், இரண்டாம் பகுதியின் கணிசமான ஆய்வுப் பணிகளும் ஏற்கெனவே நிறைவ டைந்திருந்த சூழலில், இத்தகைய முடிவை மேற்கொண்டிருப்பது ஏற்புடையதல்ல என் றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராஜமன்னார் குழுவின் அறிக்கை மாநில சுயாட்சி வரலாற்றில் எவ்வாறு ஒரு மைல்கல் லாக அமைந்ததோ, அதேபோன்று இந்த உயர்நிலைக் குழுவின் முழுமையான அறிக் கையும் இந்தியக் கூட்டாட்சிக் கருத்தியலின் எதிர்கால விவாதங்களில் மற்றொரு வரலாற் றுச் சிறப்புமிக்க பங்களிப்பாக அமைந்திருக் கும் என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு தனது உரிமைகளுக்காக மட்டு மின்றி, இந்தியாவின் அனைத்து மாநிலங்க ளின் நியாயமான உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கும் மாநிலம் என்பதை இந்த ஆய்வு மீண்டும் நிலைநாட்டியிருக்கும் என் றும் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்க முடியாத விளக்கம்!

உயர்நிலைக் குழுவின் பணிகளும் மாநி லச் சட்ட ஆணையத்தின் பணிகளும் ஒன்று டன் ஒன்று ஒத்துப்போவதாகக் கூறி, குழு வைக் கலைக்கும் முடிவை நியாயப்படுத்த முடியாது என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாநிலச் சட்ட ஆணையமும் அரசாணை யின் மூலமாக அமைக்கப்பட்ட ஓர் அமைப்பு தான் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், இரு அமைப்புகளுக்கும் இடையே செயற்கை யான வேறுபாட்டைக் காட்டி, இத்தகைய ஆழ மான ஆய்வுப் பணியைப் பாதியிலேயே கைவிடுவது நியாயமற்றது என்று குறிப்பிட் டுள்ளார்.

குறிப்பாக, அறிக்கையின் இரண்டாம் பகு திக்கான கணிசமான பணிகள் நிறை வடைந் திருந்த நிலையில், அவற்றைத் தொடர அனும திக்காமல் முடிவுக்குக் கொண்டுவருவது அறிவுசார் வளங்களையும், அனுபவத்தை யும், இதுவரை மேற்கொள்ளப்பட்ட உழைப் பையும் வீணடிக்கும் செயல் என அவர் வேதனை தெரிவித்துள்ளார்.

இதனை விளக்குவதற்காகத் தனது கடிதத் தில் ஓர் உவமையையும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

ஒரு மருத்துவமனையின் நிர்வாகம் மாறி விட்டது என்பதற்காக, மிகவும் சிக்கலான அறு வைச் சிகிச்சையின் நடுவே, அதனை மேற் கொண்டிருக்கும் அனுபவமிக்க மருத்துவக் குழுவை மாற்றுவது எவ்வளவு பொருத்தமற் றதோ, அதேபோன்றதுதான் இந்த உயர்நி லைக் குழுவைக் கலைத்திருக்கும் முடிவும் என அவர் ஒப்பிட்டுள்ளார்.

ஓர் ஆய்வின் வெற்றிகரமான நிறைவுக்கு அவசியமான அனுபவம், தொடர்ச்சி, தயா ரிப்பு, ஒருங்கிணைந்த புரிதல் ஆகியவற்றை ஓர் அரசாணையின் மூலம் எளிதாக மாற்றீடு செய்துவிட முடியாது என்றும் தெரிவித்துள் ளார்.

பங்களிப்புகளை அழிக்க முடியாது!

அரசின் திடீர் முடிவு, குழு உறுப்பினர்க ளுக்கு எத்தகைய மனவேதனையை ஏற்படுத் தியிருக்கும் என்பதைத் தம்மால் உணர முடி வதாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இக்குழுவை அமைத்தவர் என்ற முறை யில் மட்டுமின்றி, அதன் உறுப்பினர்களின் நேர்மையையும் அர்ப்பணிப்பையும் நேரடி யாக அறிந்தவர் என்ற முறையிலும் அவர்க ளது ஏமாற்றத்தையும் வேதனையையும் தாம் பகிர்ந்துகொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அதே வேளையில், ஓர் அரசாணையால் ஓர் அமைப்பைக் கலைத்துவிட மட்டுமே முடி யும்; ஆனால், அந்த அமைப்பு உருவாக்கிய சிந்தனைகளையும், எழுப்பிய கேள்விகளை யும், சமூகத்திற்கு வழங்கிய அறிவுசார் பங்க ளிப்புகளையும் ஒருபோதும் அழித்துவிட முடி யாது என அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சிறப்புமிக்க ஆளுமைகளைக் கொண்ட குழுவைக் கலைத்து, அரசமைப்புச் சட்ட முக்கியத்துவம் வாய்ந்த ஆய்வுப் பணியை முன்கூட்டியே முடிவுக்குக் கொண்டு வந்ததன் மூலம், நாட்டின் அரசமைப்புச் சட்ட எதிர்காலத்திற்கு மேலும் பங்களிக்கும் அரிய வாய்ப்பைத் தற்போதைய அரசு இழந்துவிட்ட தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசு தனது முடிவின் கடுமை யான தவறை விரைவிலோ, சற்றுத் தாமதமா கவோ உணர வேண்டிய நிலை ஏற்படும் என் றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசுகள் மாறலாம்;
வரலாற்றுப் பங்களிப்புகள் நிலைத்திருக்கும்!

கடிதத்தின் நிறைவில், உயர்நிலைக் குழு வின் மூன்று உறுப்பினர்களுக்கும் தமது ஆழ்ந்த மரியாதையையும் மனமார்ந்த நன்றி யையும் தெரிவித்துள்ள கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க முயற்சியைத் தொடங்கியதில் தமக்குப் பெருமை இருப்பதாகவும், அதைவி டப் பெருமை அதன் உறுப்பினர்கள் சாதித்தி ருப்பவற்றில் இருப்பதாகவும் தெரிவித்துள் ளார்.

அரசுகள் மாறலாம்; குழுக்கள் கலைக்கப்ப டலாம். ஆனால், இந்தியக் கூட்டாட்சிக் கருத்தி யலுக்கும் மாநில சுயாட்சிக்கும் இக்குழுவினர் ஆற்றியுள்ள அறிவுசார் பங்களிப்பு காலத்தால் அழியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாநில உரிமைகளுக்காகவும் கூட்டாட்சிக் கருத்தியலுக்காகவும் தமிழ்நாடு முன்னெடுத் துள்ள வரலாற்றுப் பயணத்தில், இந்த உயர்நி லைக் குழுவின் முதல் அறிக்கை என்றென் றும் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கும் என்பதையும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது கடிதத்தின் வாயிலாக வலியு றுத்தியுள்ளார்.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; தேனியிலே காவல்துறை சிறப்பு ஆய்வாளர் ஒருவர் அநியாயமா கொல்லப்பட்டிருக்கிறார். விஜய் அரசு, அவரது குடும்பத்திற்கு 40 லட்ச ரூபாய் நிதி உதவி அறிவிச்சிருக்கே! உயிரின் விலை அவ்வளவுதானா?

பட்டணம் : ஆமாமய்யா; நீ கேக்கறது நியாயம்தான். ஒரு விஷயம் தெரியுமா. போன மாசம் த.வெ.க. அரசு ஒரு ஜி.ஓ. போட்டது. அதில், 'காவல்துறை அதிகாரிகள் பணியின்போது உயிரிழந்தால் ஒரு கோடி ரூபாய் நிதி உதவி தரப்படும்ன்னு' சொன்னாங்க. இப்ப அவங்க ஜி.ஓ.வையே ஃபாலோ பண்ணல. நல்லாதான் நடக்குது த.வெ.க. ஆட்சி!

சிங்கம்புணரி நகரக் கழக முன்னாள் செயலாளர்

இரா.அ.கா.சிவஞானம் 8 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

திருவுருவப் படத்திற்கு கழகத்தினர் அஞ்சலி!

சிவகங்கை, நவ.11 - தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் தனிப் பணியாளர் கரு. செயல்மணியின் சம்பந்தி யும், சிங்கம்புணரி நகரக் கழக முன்னாள் செயலா ளர் இரா.அ.கா.சிவ ஞானம் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி இன்று (11.11.2026) சிங்கம்



புணரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறு கின்றது.

அன்னாரின் நினைவு நாளையொட்டி நினை வில் வாழும் இரா.அ.கா. சிவஞானம் அவர்களின் திருவுருவப் படத்திற்குக ழகமுன்னணியினர், சிங் கம்புணரி நகரக் கழகத்தி னர் மலர் தூவி மரியாதை செலுத்துகின்றனர்.



விளாத்திகுளம் வட்டம் கீழவிளாத்திகுளம் கிராமத்தில் இயங்கி வரும் அக்லூட் சிறப்பு பள்ளியில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ மாணவிகளுக்கு, புத்தாடை, பட்டாசு, இனிப்பினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி.மார்கண்டேயன் வழங்கி வாழ்த்தினார். நிகழ்வில் பள்ளி நிறுவனர் தானேஷ் கனகராஜ், ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானு வேல், ராதாகிருஷ்ணன், விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி உள்ளிட்ட ஆசிரியர், ஆசிரியைகள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

சிறுமிகள் முதல் பெண் கலெக்டர் வரை பாலியல் சீண்டல்கள்!

த.வெ.க. ஆட்சியில் இதுதான் பெண்களின் பாதுகாப்பா?

'தூய சக்தி' விஜய் கண்டுங்காணாமல் இருப்பது ஏன்?

"வடமாவட்டங்களில் கள்ளச் சாராய சாவுகள் அடிக்கடி நடைபெறும் மாவட்டமான குறிச்சி மாவட்டத்தில் இரண்டு பெயரை தன் பெயரில் கொண்டிருப்பவர் எம்.எல்.ஏ.வாக உள்ளார். இவர் வெளிநாடுகளில் பணி யாற்றி விட்டு, சென்னையில் சில காலம் பணியாற்றி னார். தேர்தலுக்கு ஓராண்டுக்கு முன்னர் தான் அரசியலுக்கு வந்தார். வந்தவருக்கு சீட் வழங்கப்பட்டு விட்டது.

புதிய மாவட்டமான இந்த மாவட்டத்தின் எம்.எல்.ஏ.வாக த.வெ.க. வைச் சேர்ந்தவர் வெற்றி பெற்றார். இளம் வாலிபர். இதனால் துடிப்புடன் வேலை செய்வார் என்று மக்கள் நினைத்தனர். ஆனால் இவர் வேலையைத் தவிர மற்ற வேலைகளில் துடிப்புடன் செயல்படத் தொடங்கிவிட்டார்.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் எம்.எல்.ஏ.வாக இருப்பதால், மாவட்டத்தின் பெண் கலெக்டர் இவருக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். அவரும் இளம் கலெக்டர் என்பதால், ஏதாவது மக்களுக்கு செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் இருப்பவர். இவரது கணவரும் பக்கத்து மாவட்டத்தில் கலெக்டராக இருப்பவர். அவரும் அதே போல மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைப்பவர்.

ஆனால், கலெக்டர் தனக்கு கொடுக்கும் மரியாதையை தவறாக புரிந்து கொண்ட எம்.எல்.ஏ. தவறான பொருள்படும்படி மெசேஜ் அனுப்பியுள்ளார். இரவில் நன்றாக குடிக்கும் பழக்கம் உள்ள எம்.எல்.ஏ. தினமும் இரவில் குடிப்பாராம். இந்தநிலை யில்தான் போதையில், தனது மாவட்டத்தின் பெண் கலெக்டருக்கு ஆபாச எஸ்.எம்.எஸ். அனுப்பியுள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

மேலும், ஒரு நாளில் இரவில் வீட்டுக்கு வந்ததாகவும் கூறப்படுகிறது. அவரும்



மக்கள் பிரதிநிதி என்பதால் மரியாதை கொடுத்து பேசியுள்ளார். ஆனால், அவரது பேச்சு சரியில்லை என்பதால், தனது கணவரிடம் கூறியுள்ளார். அவர் உடனடி யாக மனைவி பணி யாற்றும் மாவட்ட எஸ். பி.க்கு தகவல் கொடுத்துள்ளார். எஸ்.பி. பெண் என்பதால், புகாரின் தீவிரத்தை உணர்ந்து டி.எஸ்.பி.யை அனுப்பி விசாரித் துள்ளார். தற்போது கலெக்டருக்கு 24 மணி நேரமும் பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சி எம்.எல்.ஏ.வின் இந்த அத்துமீறல் குறித்து கட்சியின் பொதுச் செயலாளரும், விழுப்புரம் மாவட்டப் பொறுப்பாளருமான புஸ்ஸி ஆனந்தி டம் புகார் செய்யப்பட்டுள்ளது. அவர் சம்பந் தப்பட்ட எம்.எல்.ஏ. மற்றும் பெண் கலெக்டர் மற்றும் அவரது கணவர் ஆகியோரை நேரில் அழைத்து விசாரித்துள்ளார். பின்னர். இது குறித்து எம்.எல்.ஏ.வை கடுமையாக திட்டி அனுப்பியுள்ளார். ஆனால்எம்.எல்.ஏ.க்கு அடிவிழுந்ததாகவும் அவரது தொகுதியில் பேசும் பொருளாக உள்ளது. தற்போது ஒரு பெண் கலெக்ட ருக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக புகார்கள் எழுந்துள்ளன.

இந்த விவகாரத்தை தற்போது மூடி மறைக்கும் வேலைகள் நடந்து வருகின் றன. கலெக்டரிடம் புகார்கொடுக்க வேண்டாம் என்று ஆளுங்கட்சி சார்பில் கோரப்பட்டதால் புகார்கள் கொடுக்காமல் மன்னித்து விட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. பெண் கலெக்டர் பெருந்தன்மையாக நடந்து கொண்டாலும், மக்கள் பிரதிநிதியான எம்.எல்.ஏ. தனது நிலையில் இருந்து தவறுவது நல்ல தல்ல. நாளை மக்கள் எப்படி இவரை நம்பி செல்ல முடியும் என்றும் பொது மக்களும், சமூக ஆர்வலர்களும் கேள்வி எழுப்புகின்றனர்.

"ஏற்கனவே ஒரு எம்.எல்.ஏ. மற்றும் கட்சி நிர்வாகிகள் மீது மகளிரணி நிர்வாகிகள் உட்பட பல பெண்கள் பாலியல் புகார் கொடுத்திருக்காங்க அதுக்கே இன்னும் பதில் கிடைக்கல. இப்போ பெண் கலெக்ட ருக்கே ஆளும் கட்சி எம்.எல்.ஏ. இரவில் வில்லங்க மெசேஜ் அனுப்பி இருக்காரே. இதை எப்படி சொல்லுவாங் கன்னு கேட் டோம். இதுதான் இந்த ஆட்சியில் பெண்களின் பாதுகாப்புக்கு சாட்சி.

நன்றி :
'தினகரன் அரசியல் டைரி'
10.11.2026

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எழும்பூர் கு. வீராசாமி
நவம்பர் 11 (2015)



மொழிப் போர் தியாகியான இவர், எழும்பூர் பகுதியில் கழகம் வளர்த்தவர்களில் ஒருவராகவும் – தலைமைக் கழகப் பேச்சாளராகவும் விளங்கியவர்.

எழும்பூர் பகுதிக் கழகப் பொறுப்பாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகத்தின் தொழிற் சங்கப் பணிகளில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.